பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
24 02 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மீது உலக நாடுகள் மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- வருமான வரி மசோதா தொடர்பான மக்களவை தெரிவுக் குழுவின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.
- தில்லியில் புதிய அரசின் முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, அமைச்சர்கள் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இன்று பதவியேற்றுக் கொண்டனர்.
- தமிழகத்தில் மாநில அரசின் ஆயிரம் மலிவு விலை மருந்தகங்களை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.
- மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு – உத்திரபிரதேச அணிகள் மோதுகின்றன.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மீது உலக நாடுகள் மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் முதலீட்டாளர்கள் மாநாட்டை இன்று தொடங்கி வைத்து பேசிய பிரதமர், பொருளாதார வல்லுநர்கள், உலகளாவிய அமைப்புகள் உள்ளிட்ட அனைவரும் மிகுந்த எதிர்பார்ப்போடு உள்ளதாகக் கூறினார்.

தற்போது உலக அளவில் இந்தியாவின் வளர்ச்சி குறித்து வெளியிடப்பட்ட புள்ளி விவரங்கள் முதலீட்டாளர்களுக்கு மேலும் உத்வேகத்தை ஏற்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவை வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக உலக வங்கி உள்ளிட்ட அமைப்புகள் அங்கீகரித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஐ நா-வின் பருவநிலை மாற்றத்திற்கான அமைப்பு சூரிய சக்தி உற்பத்தியில் இந்தியா முன்னோடியாக விளங்குவதை சுட்டிக்காட்டியுள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

இந்திய பொருளாதாரத்துக்கு உலக அளவில் கடைத்துள்ள அங்கீகாரம் மாநிலங்களுக்கு நம்பிக்கையையும், புதிய உற்சாகத்தையும் ஏற்படுத்தி தந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சியில் ஜவுளி, சுற்றுலா மற்றும் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

இந்த துறைகளில் நாட்டின் பாரம்பரிய திறன்களை ஊக்குவிப்பதோடு மட்டுமன்றி, நவீன தொழில்நுட்பங்களை கொண்டு வருவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் கனிம வளங்கள் நிறைந்திருப்பது மட்டுமன்றி உள்கட்டமைப்புக்கான வாய்ப்புகளும் அதிக அளவில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார.

இந்தியாவில் உள்கட்டமைப்பு, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன என்றும், இதனை உலக முதலீட்டாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

போபால் நகரில் தேர்வுகளுக்குச் செல்வோர் குறித்த நேரத்தில் தேர்வுக் கூடத்தை அடையும் நோக்கில் திருநரேந்திரமோடி சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு 15 நிமிடம் தாமதமாகவே சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைகிறது.

இந்த திட்டத்தை வெற்றிபெறச் செய்த அனைவருக்கும் தமது நன்றியை தெரிவிப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் மூன்று லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் அவர்களுக்கான வருவாய் ஆதரவு நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து விவசாயிகளின் வாழ்க்கையிலும் முன்னேற்றத்தை அளித்து புதிய சக்தியை அவர்களுக்கு அளித்திருப்பதாகவும், அவர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கு இந்த நிதி பயன்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளில் விவசாயத்தை மேம்படுத்தி விரைவான வளர்ச்சி பெறுவதற்கு பல திட்டங்களை அரசு செயல்படுத்தி உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிறு விவசாயிகளுக்கு நிதி உதவி அளிப்பதோடு மட்டுமன்றி, அவர்களுக்கான சந்தை வசதியும் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

விவசாய செலவுகளை குறைக்கவும், அவர்களுக்கான வருமானத்தை பெருக்கவும் அரசு முயற்சிகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் நாட்டிற்கு பெருமை சேர்த்து வருவதாகவும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேலும் பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 19-வது தவணையை திரு நரேந்திர மோடி இன்று விடுவிக்கிறார்.

பீகார் மாநிலம், பாஹல்பூரில் நடைபெறும் இதற்கான நிகழ்ச்சியில், பயனாளிகளுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

அதனைத் தொடர்ந்து, அஸ்ஸாம் செல்லும் திரு நரேந்திரமோடி, குவஹாத்தியில் நடைபெறும் தேயிலைத் தொழில்துறையின் 200-வது ஆண்டு விழாவில் பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**

வருமான வரி மசோதா தொடர்பான மக்களவை தெரிவுக் குழுவின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

பிஜேபி மக்களவை உறுப்பினர் திரு பாய் ஜெய்ந்த் பாண்டா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் 31 உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரின் முதல் நாளன்று இந்த குழு மக்களவையில் அறிக்கையை சமர்ப்பிக்கும்.

**[]<<<>>>[]**

தில்லியில் புதிய அரசின் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா மற்றும் அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களுக்கு இடைக்கால பேரவைத் தலைவர் திரு அரவிந்தர் சிங் லவ்லி சட்டமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பின்னர் அனைத்து உறுப்பினர்களுக்கும் பதவியேற்றுக் கொண்டனர்.

முன்னதாக இடைக்கால பேரவைத் தலைவராக அறிவிக்கப்பட்ட பிஜேபி-யைச் சேர்ந்த திரு அரவிந்தர் சிங் லவ்லி-க்கு துணை நிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா பதவிரப்பிமாணம் செய்து வைத்தார்.

உறுப்பினர்களின் பதவியேற்புக்குப் பின் தில்லி சட்டப்பேரவையின் புதிய பேரவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

நாளை துணைநிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா சட்டப்பேரவையில் உரையாற்றுகிறார்

கடந்த அரசின் செயல்பாடுகள் குறித்த தலைமை கணக்குக் குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது.

இந்த கூட்டத்தொடர் மூன்று நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மாநில அரசின் ஆயிரம் மலிவு விலை மருந்தகங்களை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக கலையரங்கில் இன்று காலை நடைபெறும் நிகழ்ச்சியில், காணொலி வாயிலாக இந்த மருந்தகங்களை திறந்து வைத்து பேசிய முதலமைச்சர், சந்தை விலையைவிட 75 சதவீதம் குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்படும் என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - முதலமைச்சர் ) -45-- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மாநில அரசு சார்பில் அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழு தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்பேச்சுவார்த்தையில் மாநில அமைச்சர்கள் திரு தங்கம் தென்னரசு, திரு ஏ வ வேலு தலைமையிலான குழுவும், ஜாக்டோ - ஜியோ சங்க பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர்.

பத்து அம்ச கோரிக்கையை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ சங்கத்தினர் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டதிற்கு அறிவிப்பு விடுத்திருந்த நிலையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 77-வது பிறந்த நாள் இன்று மாநிலம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி சென்னை, ராயப்பேட்டையில் உள்ள அஇஅதிமுக தலைமை அலுவலகத்தில் ஜெயலலிதாவின் சிலைக்கு, கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தமிழக அரசின் சார்பில் சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள ஜெயலலிதாவின் சிலைக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா இந்த வாரம் நிறைவடைய உள்ள நிலையில் புனித நீராட வரும் யாத்ரிகர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதுவரை 62 கோடிக்கும் அதிகமானோர் கும்பமேளாவில் பங்கேற்றுள்ளதாக உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

மகா கும்பமேளாவுக்குச் செல்லும் முதியோர்கள் சிரமமின்றி செல்வதற்கு ஏதுவாக ஒரு லட்சம் தள்ளு வாகனங்கள் மத்திய சமூக நீதித்துறை அமைச்சகத்தால் இன்று வழங்கப்பட்டது.,

இதற்காக 16 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

**[]<<<>>>[]**

அங்கீகரிக்கப்படாத மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்து பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய சுகாதாரத்துறை தடை விதித்துள்ளது.

மும்பையைச் சேர்ந்த மருந்து தயாரிப்பு நிறுவனம் ஒன்றில், மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு, மாநில மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்புடன் இணைந்து நடத்திய சோதனையில், அங்கீகரிக்கப்படாத மூலப் பொருட்களை கொண்டு இந்த மருந்துகள் தயாரிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, **Ghana** உள்ளிட்ட மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு கோடியே 30 லட்சம் மாத்திரைகள் மற்றும் மூலப்பொருட்களை அதிகாரிகள் கைப்பற்றினர்.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு — உத்திரபிரதேச அணிகள் மோதுகின்றன.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

புவனேஷ்வரில் நடைபெறும் இப்போட்டி மாலை மணி 5.15-க்கு தொடங்குகிறது.

இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**